# தபால் தாமதத்தில் இதுவும் ஒரு ரகம்!

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 | மலர் 9
போன் 389 | இதழ் 205
National Tamil Daily | தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆவணி 19 ஜு அவ். 28 திங்கட்கிழமை [4-9-67]

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரத்திலுள்ள ஒருவர் அதேஊரிலுள்ள மற்ற ஒருவருக்கு அனுப்பிய கடிதம் இருநாட்களுக்குப் பின்னரே உரியவரிடம் போய்ச் சேர்ந்ததாம்.

சுழிபுரத்திலுள்ள தேவன் என்பவர் சுழிபுரத்திலுள்ள விளையாட்டுப் போதனுசிரியரான திரு. கா. அரிச்சந்திரா என்பவருக்கு சென்றமாதம் 29-ந் திகதி அனுப்பியகடிதமே இவ்விதகதியை அடைந்ததாகத் தெரிகிறது. இந்தக் கடிதத்தில் அடுத்தநாள் நடைபெறும் ஒரு முக்கிய கூட்டத்துக்குத்தாம் வரமுடியாதென்பதைத் தெரிவித்து இதற்காக மன்னிப்புக்கோரியிருந்தாராம். அடுத்த நாளான 30-ந் திகதி விலாசதாரருக்குச்சேரும் என்றநம்பிக்கையில் அனுப்பப்பட்ட இக்கடிதம் இருநாட்கள் கழிந்து இம்மாதம் முதலாந் திகதியன்றே போய்ச் சேர்ந்ததாக அறிவிக்கப்பட்டது. இடையில் விடுமுறை தினமெதுவுமின்றியிருந்த போதும் இக்கடிதம் இவ்விதம் தாமதமேற்பட்டது பற்றி கடிதம் அனுப்பியவர் தபால் அதிபருக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளாராம்.

# இலங்கை - இந்தியரை ஏற்பதில் தமிழகம் தயக்கம்

## நல்லூர் கந்தன் ரதோற்சவம்

### பல்லாயிரம் பக்தர்கள் தரிசித்தனர்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் கந்தசுவாமி கோவில் ரதோற்சவம் நேற்று சிறப்பாக நடைபெற்றது. இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நல்லூர்க் கந்தனின் ரதோற்சவத்தை தரிசிக்க வந்திருந்தார்கள்.

காலை 8 மணியளவில் கந்தன் தேர்மீதேறி பவனிவரத் தொடங்கியபோது தேரின் பின்னுல் பக்தர்கள் பிரதிஷ்டை செய்தும் அடியளித்தும் தமது காணிக்கைகளைச் செலுத்தினுர்கள். பஜனைக்கோஷ்டியினர் முருகனின் திருநாமம் உச்சரித்துப் பக்திப்பாடல்களைப் பாடினுர்கள்.

ரதோற்சவ நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக்

(2-ம் பக்கம் பார்க்க)

## தைலங்களின் அரசன்




ஒவ்வொரு

யாழ்ப்பாண வாசியும்

வாங்கி உபயோகிப்பது

இதுவேதான்!!

## திருமதி இந்திராவுடன் டட்லி ஆலோசிப்பார்

கொழும்பு, ஞாயிறு

இலங்கை-இந்தியா ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா திரும்பும் இந்தியவம்சாவழியினர் பலரையும் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லை என்று இந்திய புனர்வாழ்வு அமைச்சர் திரு ஜே. எஸ். ஹாத்தியிடம் தமிழ்நாடு அரசாங்கம் தெரிவித்துள்ளதாகவும் இதனுல் ஏற்படக் கூடிய நிலைமைபற்றி புதுடில்லியிலுள்ள இலங்கை தூதுவர் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்குத் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

பர்மாவிலிருந்துவந்த அகதிகள் ஒன்றரைலட்சம்பேர் தமிழ்நாட்டில், தமிழக அரசாங்கத்தின் பொறுப்பில் இருப்பதாகவும் இந்நிலையில் இலங்கையிலிருந்துவரும்அகதிகளை ஏற்றுக்கொள்ளக் கூடியநிலையில் தமிழக அரசு இல்லையென்றுப்புனர்வாழ்வு மந்திரியிடம் தமிழகஅரசு தெரிவித்திருக்கிறது. இது பற்றி இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் தெரிவித்திருக்கிருர். இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி இம்மாதம் 18-ந் திகதி இலங்கைக்கு விஜயஞ்செய்யும்போது இலங்கைப்பிரதமர் அவருடன் இதுபற்றிப் பேசுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## திருமதி இந்திரா யாழ்ப்பாணம் 'வருவாரா?

### அழைப்பதற்கு முயற்சி

கொழும்பு, ஞாயிறு

இலங்கை வரும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதற்கு ஒழுங்கு செய்வதென முதலில் தீர்மானிக்கப் பட்டிருந்த போதிலும் பின்னர் இந்த திட்டம் கைவிடப் பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

ஆனுல் திருமதி இந்திரா காந்தியை யாழ்ப்பாணத்துக்கு அழைக்கவும் அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கவும் சில பொது ஸ்தாபனங்களுட்பட தனிப்பட்டவர்களும் முயற்சி செய்வதாக அறியப்படுகிறது.

முன்னர் திருமதி விஜயலட்சுமி பண்டிட் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருந்தும் கடைசி நேரத்தில் அது ரத்துச் செய்யப்பட்டது. பின்னர் இந்தியப் பிரதமராக விருந்த திரு. ஜவஹர் லால் நேரு இலங்கைக்கு விஜயம் செய்தபோது அவரை யாழ்ப்பாணத்துக்கு அழைக்கப் பலர் முயற்சி செய்தும் பயன் கிடைக்காமற் போனதையும் சுட்டிக் காட்டி திருமதி இந்திராகாந்தியின் சுற்றுப் பிரயாணத் திட்டத்தில் யாழ்ப்பாணத்தையும் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## 'நாட்டின் முன்னேற்றத்துக்கு கச்சேரி முறை ஒரு தடை

### அனில் முனசிங்கா கூறுகிறர்

காலி, ஞாயிறு

'நாட்டின் துரித முன்னேற்றத்துக்குகச்சேரிமுறை ஒரு தடையாக இருக்கிறது. ஏகாதிபத்தியவாதிகளால் புகுத்தப்பட்ட இந்தமுறை இப்போது அறவே நீக்கப்படவேண்டும்.'

இவ்வாறுசமசமாஜக் கட்சி அங்கத்தவரும் அகலவத்தை முன்னுள் எம். பி. யுமான திரு. அனில் முனசிங்கா [illegible] நடை [illegible] பேசுகையில் கூறினுர்.

ஐக்கிய துறைமுக தொழிலாளர் சங்கத்தின் காலிக்கிளைக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்,

திரு. முனசிங்கா மேலும் பேசுகையில் கூறியதாவது:

அரசாங்கம் எதிர்பார்த்த அளவு வெளிநாட்டு உதவி கிடைக்கவில்லை. அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் தோல்வியாலேயே முடிந்துள்ளது. இப்போது வாழ்க்கைச் செலவு மிகவும் உயர்ந்துள்ளது. ஏழைமக்கள் தமது அத்தியாவசிய பொருள்களைப் பெறமுடியாது திண்டாடுகிருர்கள். ஆனுல் பணக்காரர்களுக்கு இவைதல்லாம் கிடைத்துவிடுகிறது.

அரசாங்கம் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் மூலம் பணம் சம்பாதிக்க முயல்கிறது. இது இங்கு விபசாரம் பரவுவதற்குத் தான் வழிவகுக்கும். ஜனுப் மசூர் மரிக்கார் உட்பட வேறுபலரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உன் மேலாடையைக் கேட்பவனுக்கு உன் அங்கியையும் கொடுத்துவிடு.

—யேசுநாதர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கவருஷ
ஆவணி மீ 19 உ (4-9-67)


## கல்வி முறை

நாட்டின் தேவையை நிறைவேற்றக் கூடிய கல்வித் திட்டத்தைக் கொண்டு வரவிருப்பதாகக் கூறும். நமது கல்வி அமைச்சர் நாட்டை வடக்கு, தெற்கு என இரண்டு பிரிவாகப் பிரித்து இரண்டு பகுதிகளிலுமுள்ள கல்வி வசதிகளை வகுப்புவாதப் பிரிவினைக் கண் கொண்டு ஒப்பு நோக்கிவருகிறார். பொது கூட்டங்களில் வெறும் 'அரசியல் வாதி'யாகத் தான் அவர் பேசி வந்தார் என்று நினைத்தோம். இப்போது அவர் நாட்டின் கல்வி அமைச்சராகவே பார்லிமெண்டில் 'வகுப்புவாதப் பிரிவினை' மனப்பான்மையுடன் வடக்கையும் தெற்கையும் ஒப்பு நோக்கிப் பேசியிருக்கிறார். பார்லிமெண்டில் அவர் எதையும் பேசலாம். அது அவருக்குள்ள உரிமை. அதைப் பற்றி நாம் எதுவும் சொல்ல விரும்பவில்லை, சொல்வதும் முறையல்ல. கல்வி அமைச்சரின் இந்தப் போக்குப்பற்றி இதற்கு முன்னரும் நாம இதே பத்தியில் சுட்டிக் காட்டியிருந்தோம். பார்லிமெண்டில் கல்வி அமைச்சர் பிரிவினை மனப்பான்மையுடன் பேசியபோது நமது தமிழ்ப் பிரதிநிதிகள் ஒருவராவது ஏன் தகுந்த பதில் சொல்ல முன்வரவில்லை யென்பதும் தேசிய ஐக்கியத்தை நிலை நாட்டுவதையே நோக்கமாகக் கொண்ட இதர உறுப்பினர் பலரும் ஏன் சரியான பதில் கொடுக்கவில்லை என்பதும் தான் புரியாமலிருக்கிறது.

நல்லபிரஜையாக, முழு மனிதனாக வாழ்வதற்குப் பயிற்சியளிப்பதுதான் கல்வியின் நோக்கம். இந்த நோக்கத்தை அடைவதற்கு ஏற்ற முறையில் கல்வித் திட்டம் அமைக்கப்பட வேண்டும். சில தினங்களுக்கு முன் சென்னைப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் தமிழக கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங் உரை நிகழ்த்தியபோது குறிப்பிட்ட சில கருத்துக்கள் தமிழக மக்களுக்கு மட்டுமல்லாமல் நமக்கும் புதிய கல்வி முறையை உருவாக்க முனையும் இதர பல நாட்டு மக்களும் சிந்தையிலிருத்தக் கூடிய பொருத்தமானவையாக இருக்கின்றன.

''கல்வி ஸ்தாபனங்களில் ஆத்மீக சம்பந்தமான விஷயங்களில் போதனை அளிக்க வேண்டியது அவசியம். இம்மாதிரி போதனை இல்லாததால் மாணவர்கள் நீண்டகாலமாக ஒப்புக்கொள்ளப் பட்ட ஒழுங்கு முறைகளிலிருந்து மாறி வருகிறார்கள். மாணவர்களிடையே ஒழுங்கீனம் ஏற்படுவதற்கும் இதுதான் காரணம்.''

''அரசியல் கட்சிகளும், மற்ற சுயநல வாதிகளும் மாணவர்களை தமது கருவிகளாக உபயோகித்துக் கொள்ளுவதை மாணவர்கள் அனுமதிக்கக் கூடாது. பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் முதலியவைகள் எல்லாம் அறிவுக் கோயில்கள். அங்கு ஒழுங்கீனத்துக்கோ, பலாத்காரம் முதலியவைகளுக்கோ இடமில்லை.'

''உயர்தரக் கல்விக்குத் தொடர்ந்து ஆங்கிலத்தையே போதனு மொழியாக வைத்துக் கொள்ளுவது சர்வதேச நிகழ்ச்சிகளை நன்கு புரிந்து கொள்வதற்கும், அறிவு வளர்ச்சிக்கும் மிகவும் உதவியாகவிருக்கும். குறிப்பாக விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் புதியகண்டு பிடிப்புகளைத் தெரிந்து கொள்ள உதவியாய் இருக்கும். எங்கு திரும்பினாலும் இன்று பிரமிக்கத் தக்க சாதனைகளைக்காண்கிறோம். ஒரே உலகம் என்றபாதையில் தான் இவையெல்லாம் இட்டுச் செல்கின்றன. இவ்வளவு வருஷங்களாக உபயோகித்து வந்துள்ள இந்த உலகமொழியை நாம் தொடர்ந்து வைத்துக் கொள்வதால் நன்மைதான் ஏற்படும் ஆங்கிலத்தைக் கைவிடுவது தேசத்தின் அபிவிருத்திக்கோ, ஒமைப்பாட்டுக்கோ உகந்ததாக இராது.''

சர்தார் உஜ்ஜல்சிங் இலங்கையரல்ல ஆயினும் அறிஞர்; அனுபவமுள்ள முதியர்; தமது நாட்டிற்காகத் தொண்டு செய்துள்ள ஒரு தேசபக்தர். அவர் கூறியுள்ளகருத்து அவரது நாட்டுமக்களுக்குத் தான் என்று ஒதுக்கி விட்டது. நமக்கும் உபயோகப்படக் கூடியவைகளை நாம் எடுத்துக் கொள்வது நல்லது. எனவே நமது கல்வி அமைச்சரும், அரசாங்கமும், அரசியல் கட்சித் தலைவர்களும் இதை சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளட்டும்.

## இன்றைய பலன்

4-9-67 திங்கட்கிழமை
(ஆவணி மாதம் 19 உ)
நட்சத்திரம்-மகம் பகல் 10-56 வரை மேல் பூரம்
திதி- அமாவாசை மாலை 6-11 வரை மேல் பிரதமை
சுபநேரம்- 12-04— 1-34
ராகுகாலம்- 7-34-9-04

மேடம்- தாராளசிந்தை தனவரவு
இடபம்- பிரிவுக்கு இடமுண்டு. பிறர் சிநேகம்
மிதுனம்- காரியம் கைகூடும் கௌரவம் உண்டு
கடகம்- மந்தநிலை மகிழ்ச்சியைக் கொடுக்கும்
சிங்கம்- குடும்பத்தால் சோர்வு, குருவின் நன்மை
கன்னி- தனதானிய விருத்தி, தன்னம்பிக்கை
துலாம்- அன்னிய வாசம், அவசர புத்தி
விருச்சிகம்- பூமி நலன், புதிய தொடர்பு
தனுசு- மக்களால் மகிழ்ச்சி, மனநிறைவு
மகரம்-நீண்ட பயணம், நினைவுச் சுழல்
கும்பம்- குடும்பத்தில் கொண்டாட்டம், குறிக்கோள் வெற்றி
மீனம்- அவப் பெயர் வரும், அவதானித்து நட

—சோதிடகலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## ''தீண்டாமைக்கு சாவுமணி அடிப்போம்''

உடுவில் எம். பி.

சுன்னாகம், ஞாயிறு

''தீண்டாமை என்பது தமிழ்சமுதாயத்தைப் பீடித்த பெருநோய். இத்தீண்டாமைப் பெருநோயைக் களையவேண்டும் என்பதற்காக தமிழரசுக்கட்சி பகிரதப் பிரயத்தனம் செய்கிறது மேடைப் பிரசாரத்தோடுமட்டும் நில்லாது சட்டத்தின்மூலமாகவும் நாம் தீண்டாமையை ஒழிக்கச் செயல்படுகிறோம்.''

இவ்வாறு நேற்றிரவு சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலய முன்றலில் திரு. ஆசீர்வாதம் ஹென்றி ஜே. பி. க்கு அளிக்கப்பட்ட பாராட்டுநிகழ்ச்சியில்பேசிய உடுவில் எம். பி. திரு தருமலிங்கம் கூறினார். மேற்படி பாராட்டுவிழாக் கூட்டத்தில் செனட்டர் திரு. நடராசாபேசுகையில் 'தீண்டாமையை சட்டத்தின் மூலமாக மட்டும் மாற்றிவிட முடியாது என்றும் பெரும்பான்மைச் சமுதாயத்தின் மனமாற்றம் தீண்டாமைக்கு மாற்றுமருந்தென்றும் குறிப்பிட்டார்.

## ''ஆசிரியர்களை வலுக்கட்டாயமாக இடம் மாற்றக்கூடாது''

### வலி. கிழக்கு தமிழாசிரியர் சங்க தீர்மானங்கள்

உரும்பராய், ஞாயிறு

மாணவர்களின் கல்வித் தரம் பாதியாமல் இருக்கும் பொருட்டு பிரசவ லீவில் நிற்கும் ஆசிரியைகளின் இடங்களுக்குப் பதில் ஆசிரியர்களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு வசதியாக 'றிலீவ்' ஆசிரியர்களை நியமனம் செய்யவேண்டுமென்றும், பாடசாலைகள் தரப்படுத்தப்படும் போது உயர்தர பாடசாலையில் கீழ் வகுப்புகளைவைத்து நடத்துவதற்கு அனுமதித்தால் பல பாடசாலைகள் மூடப்படும் நிலை ஏற்படலாமாகையால் அப்படி ஏற்படாதிருக்க வழி செய்யவேண்டுமென்றும் கோரும் தீர்மானங்களுட்படப்பல தீர்மானங்கள் வலி. கிழக்குத் தமிழாசிரியர்களால் நிறைவேற்றப்பட்டுள்ளன. வலி. கிழக்குத்தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. க. இ. குமாரசாமி தலைமையில் நீர்வேலி அத்தியார் இந்துககல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி சங்க நிர்வாகசபையின் அவசரக் கூட்டத்தில் இத்தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

ஆசிரியர்கள் இடமாற்றத்திற்குரியவர்களல்ல ரென்றும் திட்டமற்ற இடமாற்றத்தினுல் குறிப்பாக வட பகுதியில் கல்வி நிலை மோசமடைவதாகவும், வலுக்கட்டாயத்தின் பேரில் ஆசிரியர்கள் இடமாற்றப்படக்கூடாதெனவும் மற்றும் ஜி. ஏ. கியூ. பரீட்சையில் தேறிய ஆசிரியர்கள் இரு வருட முழுச்சம்பளத்துடன் பல்கலைக்கழகத்திலிருந்து படிப்பைப் பூர்த்தி செய்ய வசதி செய்யவேண்டுமெனவும் சங்கம் தீர்மானங்கள் நிறைவேற்றியது.

வலி. கிழக்குப் பகுதியில் கதிரிப்பாய், போன்ற இடங்களில் உள்ள பௌத்த பாடசாலைகளில் அயற்பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் அனுமதிக்கப் படுவதால் அயலில் உள்ள ஏனையபாடசாலைகளில் சராசரி வீழ்ச்சியடைந்து கொண்டு போவது கவலையளிப்பதாகவும் இதுசம்பந்தமாக கல்விப்பகுதியுடன் நெருங்கிய தொடர்பு பூண்டு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும் வலிகாமம் கிழக்குப்பகுதிப் பாடசாலைகளுக்கான மத்திய சங்கீத விழாவினை இம்மாதம் 24-ம்திகதி நடத்துவதெனவும், இவ்விழாவை யொட்டி விடுதலைக்கால கழகம் ஒன்றை நடாத்துவதெனவும், அகில இலங்கை ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தினுல் தயார் செய்யப் பெற்ற பன்னிரு கோரிக்கைகள் பற்றிய பிரசாரக் கூட்டங்களை நடாத்துவதெனவும் சங்கம் தீர்மானித்தது நிறைவேறின.

மேற்கண்ட தீர்மானங்கள் [illegible] தமிழாசிரியர் சங்கமூலம் தாய்ச் சங்கத்துக்கும் கல்விப்பகுதிக்கும் அனுப்பப்பட இருக்கின்றன.

## நல்லூர்க் கந் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூட்டுத்தாபனத்தார் வானொலி மூலம் ஒலிபரப்பிக்கொண்டிருந்தார்கள்.

யாழ்ப்பாண நகரசபையினரும் பொலிசாரும் எடுத்துக்கொண்ட நல்ல நடவடிக்கைகள் காரணமாக பெற்றோரிடமிருந்து பிரிந்து சென்ற பல குழந்தைகள் மீட்கப்பட்டன. இரண்டொரு சில்லறைத் திருட்டுக்களைத் தவிர வேறு திருட்டுக்களெதுவும் நேற்று நடைபெறவில்லையெனப் பொலிசார் தெரிவித்தனர்.

கந்தனின் ரதோற்சவத்தைத் தரிசிக்க வந்த அடியார்களுக்கு தாகசாந்தி அளிக்குமுகமாக பல இடங்களிலும் தண்ணீர்ப் பந்தல்களில் தொண்டர்கள் அடியார்களுக்கு நீரும் மோரும் வழங்கிக்கொண்டிருந்தார்கள்.

இன்று மாலை 5 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும்.

## நைஜீரியா உள்நாட்டு போர்

லாகோஸ், செப். 3

சமஷ்டி நைஜீரியத் தலைநகரான லாகோஸிலிருந்து வரும் செய்திகள், சமஷ்டித் துருப்புகள் நைஜீரிய நடு மேற்பகுதிக்குள் ஆழமாகப் பிரவேசித்துள்ளதாகக் கூறுகின்றன.

நடு மேற்பகுதியை அண்மையில் தான் பிரிவினை பியாவ்ரா துருப்புகள் கைப்பற்றியது என்பது தெரிந்ததே.

இதற்கிடையில், வாஷிங்டனிலிருந்து கிடைத்துள்ள ஒரு செய்தி, நைஜீரியாவில் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரிலும் எத்தரப்பினருக்காவது அமெரிக்கா ஆயுதங்கள் விற்காது என ஓர் அரசாங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளதாகக் கூறுகிறது.

## வழக்கறிஞர் மறைவுக்கு அனுதாபம

சாவகச்சேரி, ஞாயிறு

பிரபல வழக்கறிஞரான அட்வக்கேட் திரு. எஸ். ராஜேந்திரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மரணமானது குறித்து நேற்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் பத்து நிமிட நேரம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். கே. திவியநாயகம் மறைந்த வழக்கறிஞரின் பணிபற்றிக்குறிப்பிட்டார்.

## நாட்டிலும் நகரிலும்

இந்தியாவுக்கும்இலங்கைக்குமிடையில் சில காலமாக இருந்து வந்த கச்ச தீவுப் பிணக்கு ஒரு முடிவுக்கு வரும் காலம் நெருங்கி விட்டது போலத் தெரிகிறது.

சில தினங்களுக்கு முன் இந்தியா தனது கடல் எல்லையை ஆறு மைல் தூரத்திலிருந்து பன்னிரண்டு மைல் தூரத்துக்கு விஸ்தரித்தது. இதைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கமும் தனது கடல் எல்லையை பன்னிரண்டு மைல் தூரத்துக்கு நீடிக்கக் கூடுமென்று ஒரு வதந்தி எழுந்திருக்கிறது.

இப்படி இரு நாடுகளும் தங்கள் எல்லைகளை விஸ்தரிக்கும் போது கச்ச தீவு எந்த நாடுகளின் எல்லைக்குள் வருகிறதென்று தீர்மானிப்பது கஷ்டம். ஏனென்றால் இந்தப் பகுதியில் சரியான கடல் அளவுகள் இது வரை எடுக்கப்படவில்லையென்றே தோன்றுகிறது.

கச்ச தீவு இரு நாடுகளின் பன்னிரண்டு மைல் எல்லைக்குள்ளும் வரும் பட்சத்தில் அதன் பாத்யதை பற்றி இரு அரசாங்கங்களும் கலந்து யோசிக்க வேண்டும்.

இத்தீவின் வழியாக கள்ளக் கடத்தலும் கள்ளக்குடியேற்றமும் நடைபெறுவது எல்லோரும் அறிந்த விஷயம். இவற்றை தடுக்க வேண்டுமென்று இரு அரசாங்கங்களும் கங்கணம் கட்டியிருப்பதும் யாவரும் அறிந்ததே.

இதற்கு சுலபமான வழி கச்ச தீவில் இரு நாடுகளும் கூட்டாக கடற்படை நிலையங்களும் பொலிஸ் நிலையங்களும் அமைத்து பாதுகாப்பு செய்வதே என்று எனக்குத் தோன்றுகிறது.

ஃ

ஆத்மாவில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா? அது இருப்பதை உங்களால் நிரூபிக்க முடியுமா? அப்படியானுல் இப்பொழுதே அமெரிக்காவுக்கு ஒரு பிளேன் 'புக்' செய்யுங்கள். அங்கே உங்களை இரண்டரை லட்சம் டாலர் [ஒரு கோடி ரூபாய்க்கு மேல்] காத்திருக்கிறது.

ஜேம்ஸ் கிட் என்ற ஒரு சீமான் இரண்டரை லட்சம் டாலர் பெறுமதியான தனது தோட்டத்துக்கு உயில் எழுதிவிட்டு இறந்து விட்டான். மனித ஆத்மா என்பதாக ஒன்று இருப்பதை எவனொருவன் நிரூபிக்கிறானோ அவனுக்கே அந்தத் தோட்டம் சேர வேண்டியது என்று அந்த உயிலில் கூறப்பட்டிருந்தது.

உலகத்தின் பல பாகங்களிலிருந்து பல நிபுணர்கள் ஆத்மா இருப்பதை நிரூபிப்பதற்கு அமெரிக்கா சென்றனர். சுப்றீம் கோர்ட் நீதவான் ஒருவர் இவர்களுடைய வியாக்கியானங்களையும் நிருபணங்களையும் ஆற அமரக் கேட்டுவிட்டு, 'இந்த விசித்திரமான வியாஜ்யத்தில்ஒரு முடிவுக்கு வர கோர்ட்டார் தெய்வத்தின் துணையை நாடவேண்டும்' என்று கூறி தமது தீர்ப்பை பத்து நாட்களுக்கு ஒத்தி வைத்துள்ளார்.

ஆத்மா என்பதாக ஒன்று இருப்பதை நிருபிக்கக் கூடியவர் கேவலம் ஒரு கோடி ரூபாய்க்கு ஆசைப்பட்டு அமெரிக்காவுக்கு போவரா என்பது கேள்வி.

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் வியட்னும் தேர்தல் நேற்று அதிகாலை ஆரம்பம்

## கடந்த ஒரு வாரத்தில் 190 பேர் கொலை

சைகோன், செப். 3

தென் வியட்னுமில் தேர்தல் நேற்று ஆரம்பித்து விட்டது. ஒரு ஜனதிபதி, உப ஜனுதிபதி, மற்றும் 60 பேரைக் கொண்ட செனேட் சபையையும் தேர்ந்தெடுக்கவே இத் தேர்தல் நடைபெறுகின்றது.

தென் வியட்னும் தேர்தலில், 60 லட்சம் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் பங்கு பற்றுகின்றனர்.

தென் வியட்னுமில் அதிபர் ஜெனரல் வான் தியூவும், பிரதமர் ஏர் மார்ஷல் கா ஹியும் தேர்தலில் போட்டியிடுகின்றனர்

வியட்காங்கியரின் பயமுறுத்தல்கள் இருந்த போதிலும், நேற்றுக் காலை 7 மணிக்கே மக்கள் வாக்களிக்கத் தொடங்கி விட்டனர்.

**வியட்காங்கியர் தாக்குதல்**

கடந்த ஒரு வாரத்தில், வியட்காங்கியர் 190 சிவிலியன்களைக் கொன்றிருக்கின்றனர். மேலும் 600 தென் வியட்னுமியர் காயப்படுத்தப்பட்டனர் அல்லது கடத்திச் செல்லப்பட்டனர்.

தென் வியட்னும் தேர்தலுக்கு, அமெரிக்கா உட்படப் பல நாடுகள் பார்வையாளர்களை அனுப்பி வைத்துள்ளன.

தேர்தலில் வெற்றி பெறும் அபேட்சகர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் வியட்னும் போருக்கான சமாதான ஆலோசனைகளை அமெரிக்க அரசாங்கம் பரிசிலனை செய்யத் தயாராக விருப்பதாக வாஷிங்டன் தெரிவித்துள்ளது.

**இரு பத்திரிகைகள் தடை செய்யப்பட்டன**

சைகோனில் வெளியாகும் இரண்டு பத்திரிகைகள், காலவரையின்றித் தமது பிரசுரத்தை நிறுத்துமாறு தென் வியட்னும் அரசாங்கத்தினுல் உத்தரவிடப்பட்டுள்ளன. அப்பத்திரிகைகள் கம்யூனிஸ்ட் இலக்கியத்தைப் பிரசுரித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டன.

## நாஸருக்கு அழைப்பு

கெய்ரோ, செப். 3

ஐ. அ. கு. ஜனதிபதி நாஸரை சவுதி அரேபிய மன்னர் பெய்ஸால், தமது நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளார். நாஸர் இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் சவுதி அரேபியாவுக்கு அடுத்த மாதத்தில் விஜயம் செய்வாரெனத் தெரிகிறது.

## வெள்ளத்துக்கு 15 பேர் பலி

லக்னே, செப். 3

உத்தரப் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

டில்லியில் 50,000 ஏக்கர் நிலப்பரப்பில் நிறைந்துள்ள வெள்ள நீரை அகற்றுவதற்குக் கடற்படையினரின் உதவி நாடப்பட்டது.

## நைஜீரியாவில்

லாகோஸ், செப். 3

நைஜீரியாவின் மேற்கு பகுதியில் பியாவ்ராத் துருப்பினர்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளதாகச் சமஷ்டி நைஜீரியா அறிவித்துள்ளது.

## உயரும் வாழ்க்கைச் செலவு

கொழும்பு, ஞாயிறு

வாழ்க்கைச் செலவு சென்ற மாதத்தில் முன்னெப்போதையும் விட உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

1.1 புள்ளி சென்ற மாதத்தில் கூடுதலாக உயர்ந்தது.

சிகரட் விலை உயர்வு, இறைச்சி, மீன், சிலவகை காய்கறிகள் மற்றும் லவங்கம் பொருள்களின் விலை உயர்வினுல் வாழ்க்கைச் செலவு இவ்விதம் உயர்ந்ததாக தகவல் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

## பிரயாணிகள் கவலை

அராலி, ஞாயிறு

அராலி - வட்டுக்கோட்டைக் கூடாகச் செல்லும் யாழ்ப்பாணம் - சங்கானை பஸ்சேவை சென்ற சில மாதங்களில் மிகவும் ஒழுங்காக நடைபெற்றதென்றும், இப்போது சில நாட்களாக மீண்டும் சீர்கெட்டு வருவதாகவும் இதனுல் ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளர், கர்ப்பிணிகள் பல மணி நேரம் பஸ் தரிப்புகளில் காத்து நிற்கவேண்டியுள்ளதாகவும் பிரயாணிகள் கவலை தெரிவித்தனர்.

# இந்திய உள்துறை மந்திரி ஸ்ரீநகருக்கு விஜயம்

## நிலைமையை நேரில் பார்த்தார்

ஸ்ரீநகர், செப் 3

இந்திய உள்துறை மந்திரி திரு. சவான், கலவரங்கள் நடந்த ஸ்ரீநகருக்கு நேற்று விஜயம் செய்தார்.

அவர் நாளை புதுடில்லிக்குத் திரும்ப முன்னர், ஜம்முவுக்கும் செல்வார்.

நேற்று ஸ்ரீநகரில் அவர், ஜம்மு காஷ்மீர் பிரதமர் திரு. சாதிக்கைச் சந்தித்தார். காஷ்மீர் பண்டிட் சங்கத்தின் பிரதிநிதிகள் சிலரும் திரு. சவானைச் சந்தித்துத் தமது கருத்தை எடுத்துரைத்தனர்.

**திரு. சாதிக் கருத்து**

பத்திரிகையாளரிடம் பேசுகையில், மக்களை ஒற்றுமையாக வாழும்படியும், கட்டுப் பாடாக நடக்கும் படியும் காஷ்மீர் பிரதமர் திரு. சாதிக் கேட்டுக் கொண்டார்.

நடந்து முடிந்த கலவரங்களையிட்டு நீதி விசாரணை நடாத்தும் யோசனையைத் தாம் ஆதரிக்கவில்லை எனவும் திரு. சாதிக் தெரிவித்தார். 'நீதி விசாரணையைத் தற்போதைய சூழ்நிலையில் நடாத்தினுல், சில கஷ்டங்கள் ஏற்படலாம்' என அவர் கூறினுர்.

# "எதிர்காலம் இளைஞர் கையில் இருக்கிறது"

கொழும்பு, ஞாயிறு

"இன்று நாம் ஒரு விஞ்ஞான யுகத்தில் வாழ்கின்றேம். வருங்கால மக்கள் விஞ்ஞானத்தையே நம்பி வாழவேண்டிய நிலை ஏற்பட்டுவருகிறது. விஞ்ஞானமே ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலப் பொருளாதாரத்தைச் சிருஷ்டிக்கும் பெரும் பொறுப்பு வருங்கால இளைஞர்களின் கையிலேயே இருக்கிறது. எனவே இவ்விளைஞர்களுக்கு விஞ்ஞானக் கல்வி ஊட்டப்பட வேண்டியது மிக அவசியம். இக்கால மாணவர்களுக்கு உயர்தர விஞ்ஞானக் கல்வியைப் புகட்டுவதற்கு முதல் தரக் கல்லூரிகளில் சிறந்த விஞ்ஞான ஆய்வு கூடங்கள் அமைக்கப்படல் வேண்டும்" என காரைநகர்இந்துக் கல்லூரி அதிபர் திரு. ஆ. தியாகராசா வெள்ளவத்தை சைவமங்கையர்கழக மண்டபத்தில் நடைபெற்ற காரைநகர் இந்துக் கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூட கட்டட நிதி ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

காரைநகரிலிருக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு உயர்தர விஞ்ஞானக் கல்வி புகட்டுவதற்கு காரைநகர் இந்துக் கல்லூரியில் ஒரு விஞ்ஞான ஆய்வு கூடம் அமைக்கப்படவேண்டியது மிக அவசியமெனவும், அதற்கு அரசாங்கத்தின் உதவியை எதிர்பாராது, பொது மக்கள் தங்கள் பணத்தால் இதை அமைத்துக்கொள்ள முன்வரவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

விஞ்ஞான ஆய்வுகூட கட்டட நிதி திரட்டுவதற்கென கொழும்பில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

# மேற்கத்தைய நாடுகளுக்கு அரபு எண்ணை விநியோகம்

## அல்ஜீரியா, சிரியா எதிர்ப்பு

கார்டூம், செப். 3

மேற்கத்தைய நாடுகளுக்கு எண்ணை விநியோகம் செய்வது என்ற அரபு உச்சி மாநாட்டின் தீர்மானத்தையொட்டிப் பல அரபு நாடுகள் விரைவில் எண்ணை விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்குமென சூடான் அதிபர் இங்கு அறிவித்துள்ளார்.

ஆனுல், அல்ஜியர்ஸிலிருந்து வரும் செய்தியொன்று அல்ஜீரியா, மேற்கத்தைய நாடுகளுக்கு எண்ணை ஏற்றுமதி செய்வதில்லை என்ற தனது முடிவை மாற்றுவது எனத் தெரிவிக்கிறது.

மேற்கத்தைய நாடுகளுக்கு எண்ணை விநியோகம் செய்வது என்ற அரபு உச்சி மாநாட்டின் தீர்மானத்தை டமாஸ்கஸ் ரேடியோவும் கண்டித்துள்ளது.

**இந்தோனேஷிய**

# பொதுத்தேர்தலில் போட்டியிட

## கம்யூனிஸ்டுகளுக்கு அனுமதியில்லை

ஜக்கார்த்தா, செப். 3

இந்தோனேஷியாவின் அடுத்த பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர்கள் போட்டியிட அனுமதிக்கப்பட மாட்டார்களெனத் தெரிய வருகிறது.

தம்மைச் சந்தித்த மாணவர் தூது கோஷ்டியொன்றிடம், தடை செய்யப்பட்டுள்ள இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சியின் அபேட்சகர் எவரும் தேர்தலில் பங்கு பற்ற அனுமதிக்கப்படக் கூடாது என அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி திரு. ஆதாம்மாலிக் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

# மண்டுவில் கத்தி வெட்டு வழக்கில்முதல்எதிரிவிடுதலை

சாவகச்சேரி, ஞாயிறு

'மண்டுவிலில் உள்ள எனது தோட்டத்தில் நின்றபோது எதிரிகள் இருவரும் உழவு யந்திரத்தில் வந்து எமது வயலினூடாகச் செல்லவரம்பை வெட்ட முயன்றபோது நான் வெட்ட விடாது தடுத்தேன். அப்போது முதல் எதிரி கட்டிப் பிடிக்க இரண்டாம் எதிரி எனது கையிலும் கன்னத்திலும் கொடுவாக்கத்தியால் வெட்டினுர். நான் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 40 நாள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றேன். இன்னும் சிகிச்சை பெற்றே வருகிறேன்.'

மண்டுவில் கத்திவெட்டு வழக்கு சாவகச்சேரி மஜிஸ்டிரேட் திரு. கே விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சாட்சியமளித்த வேலுப்பிள்ளை காங்கேசு மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜனவரிமாதம் 5ந்திகதி சாவகச்சேரிக்கு அண்மையிலுள்ள மண்டுவில் என்னுமிடத்தில் வேலுப்பிள்ளை-காங்கேசுவுக்குக்கொடுவாக்கத்தியால் வெட்டிப் படுகாயப் படுத்தியதாகவேலுப்பிள்ளை செல்வராசா அல்லது ராசா, பொன்னையா சண்முகரத்தினம் அல்லது ரத்தினம்ஆகிய இருவர்மீதும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. வழக்காளி தரப்பில் புரக்டர் திரு. எஸ். பி. மயில்வாகனம் சாவகச்சேரிப்பொலிசாரின் அனுசரணையுடன் வழக்கை நடத்தினுர். எதிரிகள் தரப்பில் அட்வகேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், புரக்டர் திரு. வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

எஸ். சிவகுரு, முறிவுநோவு வைத்திய அதிகாரி திரு. ரீ. பரமேஸ்வரன், யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி திரு. எஸ் சுப்பிரமணியம், சாவகச்சேரி வைத்திய அதிகாரி திரு. கே. சண்முகராசா ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

விசாரணைமுடிவில் 2-ம் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்டிரேட், முதல் எதிரியை விடுதலை செய்து 2ம் எதிரியின் கைவிரல் அடையாளங்களை எடுக்கும்படி உத்தரவிட்டு செப்டம்பர் 12ந் திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படியும் உத்தரவிட்டு அத்திகதி வரை தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

# இந்திய வங்கி முன் துணிகரமான கொள்ளை

## வங்கிக் கார் கொள்ளையர் காரைத் துரத்தியது

கம்பாலா [உகாண்டா] செப். 3

இரு தினங்களுக்கு முன், இந்திய வங்கியின் முன்னிலையில் வைத்து, ஒரு ஆபிரிக்க கொள்ளைக் கோஷ்டி, 11,500 பவுணைக் கொள்ளையடித்துச் சென்றது. இந்தக் கோஷ்டியைப் பிடிப்பதற்காக இவ்விடத்துக்கருகில் உள்ள அடர்த்தியான காடுகளில் அவர்களைத் தேடுவதற்காகப் பொலிஸ்காரர்களும், ஒரு ஹெலிகொப்டரும், துப்புநாய்களும் சென்றிருக்கின்றன.

கொள்ளையர் கோஷ்டியில் 3பேர் பிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து நேற்று மாலைக்குள் 5,300 பவுண் மீட்கப்பட்டுள்ளது.

உகாண்டா இந்திய வங்கியில், பணத்தைக் கட்டுவதற்காக வங்கிக் காஷியர், மற்றவர்களுடன் வங்கிக் காருக்குச் சென்று கொண்டிருந்தார். அப்போது கொள்ளைக் கோஷ்டி அவர்கள் மீது பாய்ந்தது.

வங்கியின் ஊழியர் ஒருவரை, அவருடைய நெற்றியில் கத்தியால் குத்திவிட்டு பணத்துடன் அங்கிருந்த ஒரு காரில் ஓடி விட்டனர்.

வங்கி காஷியரும் டிரைவரும் வங்கிக் காரில் கொள்ளையர்களை 13 மைல் தூரம் துரத்திச் சென்று பின்னர் கொள்ளையரின் காரின் பின் பக்கத்தில் மோதி அதை நிறுத்தினர். ஆனுல் கொள்ளையர்கள் காட்டுக்குள் தப்பியோடி விட்டனர்.

பொலிஸார் வருவதற்கு முன்னரே, கொள்ளையர்களைத் தேடும் முயற்சியில் கிராமவாசிகளும் சேர்ந்து கொண்டனர். இரண்டு பேர் சீக்கிரமே பிடிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் தப்பியோட முயன்ற போது கழுத்தில் சுடப்பட்டது. மற்றொருவரின் காலில் சுடப்பட்டது. இன்னொருவர் காட்டில் பிடிபட்டார்.

கோஷ்டியைச் சேர்ந்த மற்றவர்கள் காடுகளில் ஒளித்துக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. இவர்களைத் தேடும் வேலை நடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம்பெண் தற்கொலை

யாழ்ப்பாணம், திங்கள்

''இன்றுநான் உங்களுக்குத் தேநீர் தருகின்றேன். இனிமேல் உங்களுக்கு யார் தரப் போகிறீர்கள்?'' எனத்தமையனைப் பார்த்துக் கேட்ட தங்கை ஒருத்தி இப்படிக் கேட்ட சிறிது நேரத்தில் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். இப்பரிதாபநிலை சம்பவம் அளவெட்டியில் நடைபெற்றது.

மரணமான சின்னத்துரை புவனேஸ்வரி என்ற 18 வயது இளம்பெண்ணின் மரணவிசாரணையின் போதே மேற்கண்ட விபரம்தெரிவிக்கப்பட்டது. இம் மரணம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணவிசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராஜா மரணவிசாரணை நடத்தினார்.

மரணமானவருக்கு பல திருமணங்கள் பேசிவந்ததாகவும், ஒன்றும் சரியாகப் பொருந்தாததால் இவர் சில நாட்களாக மனமுடைந்து காணப்பட்டதாகவும், சம்பவம் நடந்த தினத்தன்று தமையனுக்கு தேநீர் தயாரித்துக்கொடுத்து விட்டு, இனிமேல் யார் தேநீர் தரப் போகிறீர்கள் எனக்கேட்டதாகவும் மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது மரணமானவரை டாக்டர் திருநாவுக்கரசு பிரேத பரிசோதனை செய்தார்.

மரணமானவரின் தகப்பனரான சின்னத்துரையும் சாட்சியமளித்த பின்னர் தற்கொலையெனத்தீர்ப்பளிக்கப்பட்டது. [ந. நி.]

## கமிஷன் யோசனை

கொழும்பு, ஞாயிறு

மதுபானம் அருந்திப் பழக்கப்பட்ட ஒரு மனிதனை மதுபானம் அருந்தாமல் எப்படித் தடுக்க முடியாதோ அதேபோல்சூதாட்டத்திலீடுபட்டவனையும் தடுக்க முடியாதென்றும் சட்டத்தினால் தடுத்தாலும் கூட சூதாடுபவன் கள்ளத்தனமாக அதைச் செய்யவே முனைவானென்றும், வரிவிதிப்பு முறைபற்றி ஆராய்ந்து வரும் கமிஷன் தனது இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இதனால் சூதாட்டத்தின் மீது பந்தயம கட்டுவதை சட்ட பூர்வமாக்கி அதன் மூலம் வரியாகப் பெருந்தொகையான பணம் அறவிட்டும் பொருளாதாரத்தைக் விருத்தி செய்யலாமெனசேர் ஆர்தர்ரணசிங்காவின் தலைமையிலுள்ள இந்தக் கமிஷன் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

உயர்கல்விபெற

## ஜெர்மனிக்கு நால்வர் பயணம

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையைச் சேர்ந்த மூவர் ஜெர்மன் செல்லவிருக்கிறார்கள். இராசரத்தினம், சிவானந்தம், செந்திநாதன் ஆகிய இம் மூவரும் பொறியியல் பயிற்சிக்காக அரசாங்க செலவில் ஜெர்மனிக்குச் சென்றர்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் மின்சார மேற்பார்வையாளராகக் கடமையாற்றும்தையிட்டியைச் சேர்ந்த திரு. வி. இரத்தினசிங்கம் என்பவரும் இரு வருடப் பயிற்சி பெறும் பொருட்டு அரசாங்க செலவில் ஜெர்மன் பயணமானார்.

துப்பாக்கிச்சூடு

## காயமுற்ற மூவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சங்கானையில் நேற்றுமுன் தினம் இரவு நடந்ததாகச் சொல்லப்படும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் காயமடைந்த வைரவன் இராசதுரை என்ற17 வயது வாலிபரும், இராசதுரை என்ற இன்னொரு 18 வயது வாலிபரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 30-ம் திகதி இங்கு நடைபெற்றசண்டையொன்றின் எதிரொலியே இச்சம்பவம் எனச்சொல்லப்படுகின்றது. இச்சண்டையில் காயமடைந்த மற்றொருநபரான பொன்னுக்கிளி என்பவரும் பொலிஸ் பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் சங்கானைப் பொலிசார் மூவரைக் கைதுசெய்து விசாரணை நடத்தியதாகவும் தெரிகின்றது. (ந. நி.)

## விவசாயிகள் தயக்கம

அராலி, ஞாயிறு

நெல் உற்பத்தியை இந் நாட்டில் பெருக்கவேண்டுமென அரசாங்கம் கிருஷிகப் பகுதி அதிகாரிகளை வற்புறுத்தி வருவதால், அதிகாரிகள் ரசாயன உரத்தில் நல்ல விளைச்சலைத் தரக்கூடிய 'எச்-4' போன்ற இனக்கலப்புச் செய்யப்பட்ட நெற்களை விருத்தி செய்து விவசாயிகளுக்கு விதைநெல்லாக விற்பனை செய்து வருகிறார்கள். ஆனால் இதன் அரிசி சுவையற்றதெனக் கூறி விவசாயிகள் இவ்வின நெல்லை உற்பத்தி செய்ய தயங்குகிறார்கள்.


# பெண்களின் மாதவிடாய் தாமதமேற்பட்டுள்ளதா?

எக்காரணத்தாலும் இரண்டு மூன்று மாதம் மாதவிடாய் தாமதமேற்பட்டிருந்தால், தாமதமின்றி பூரண குணமடைய உண்மையான பாதுகாப்பளிக்கும்

MENSOSTERONE

பாவியுங்கள்.

இது இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டது

இம் மருந்தால் ஆயிரக்கணக்கான பெண்கள் குணமடைந்துள்ளனர்

எல்லா ஆங்கில மருந்துச்சாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விலை 12-50. தபால் செலவு -/75

விநியோகிப்பவர்கள்!

மெட்ரோ ஏஜென்ஸி

235 1/1, நொரிஸ்ரோட், கொழும்பு



# 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.




அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.

உங்களுடைய அடுத்த பெரிய சுவீப்புகளில்

முதல் பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு அவர்களின் பரிசுத் தொகையிலிருந்து கீழ்க்காணும் கார்களை வாங்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

சீட்டிழுப்பு இல. 158 தேதி 7—9—67 புத்தம்புதிய ஹோல்டன் ஸ்டேசன்வகன் ரூ. 19.100★



சீட்டிழுப்பு இல. 158

சீட்டிழுப்பு இல: 159 தேதி 14-9.67 புத்தம்புதிய ஒப்பல் கடெற் கார் ரூ. 14.425 ★



சீட்டிழுப்பு இல. 159

★ இவை தீர்வை உள்ளடங்கிய சாதாரண கமபனிப்பட்டியல் விலைகளாகும இந்தக் கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப்பின் 14 நாள்களுக்கு மட்டும் வழங்கப்படும்

## ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### கேள்வி விளம்பரம்

**உரும்பிராய் பட்டினசபை**

உரும்பிராய் இந்துக்கல்லூரி ஒழுங்கை திருத்துவதற்கு எம்மால் கேள்விப் பத்திரங்கள் 1967-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 17-ந் திகதி முற்பகல் 10-00 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

ரூ. 5000/-க்கு மேல் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களுக்கு 1967-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரையும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். ஒப்பந்தக்காரர்கள் கீழ்க்கண்ட தொகை செலுத்தி ரெண்டர் பத்திரம் பெற்றுக்கொள்ளலாம். ரெண்டர் பத்திரப்பணம் ரூபா 10/- திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

ரெண்டர் பணம் ரூ. 50-00.

ரெண்டர் பத்திரப்பணம் ரூ. 10-00.

க. பத்மராசா,
தலைவர்,
பட்டினசபை,
உரும்பிராய்.

பட்டினசபை அலுவலகம்,
உரும்பிராய்,
2-9-67. 222

### ஓமந்தைக் கிராமசபை கேள்வி விளம்பரம்

**மத்திய நூல்நிலையக் கட்டிடம்**

மத்திய நூல்நிலையக் கட்டட வேலைக்குக் கேள்விகள் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரரிடமிருந்து 8-9-67 காலை 10-00 மணி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் 7-9-67க்குமுன் கேள்வி வைப்புப் பணம் ரூபா 50/-ம் பத்திரப்பணம் ரூபா 10/-ம் கிழக்கு மூலை வடக்கு [ஓமந்தை] கிராமசபை அலுவலகத்தில் கட்டி விண்ணப்பப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் பத்திரப் பணம் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது. எம்மிடமிருந்துபெறும்பத்திரத்திலேயே விண்ணப்பிக்கவேண்டும். ஏனைய விபரங்களை எமது கிராமசபை அலுவலகத்தில் அறியலாம்.

[ஒப்பம்]
அ. வீரகத்தி,
கி. ச. அக்கிராசனரும்
சமாதான நீதவானும்,
கிழக்குமூலை வடக்கு.

எஸ் என். சர்மா,
எழுதுவினைஞர்,
கி. ச. அலுவலகம்.
ஓமந்தை,
1-9-67. 221

### வரணிக்கிராமசபையின் கேள்வி விளம்பரம்

வேலைகள்:- [1] கரம்பைக் குறிச்சி கிழக்கு அரசினர் பாடசாலைத் தெரு. [2] நாவற்காடு புளிவேலி ஊரெல்லைத் தெரு.

1967-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 14-ந் திகதி காலை 10 மணி வரை வரணிக் கிராமச் சபை அக்கிராசனரால் மேலே சொல்லப்பட்ட வேலைகளுக்குத் தனித்தனியே ''சீல்'' வைத்த கேள்விப்பத்திரங்களேற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரப் பிணைப் பணம் ரூபா 25/-ம் கிரயமாக ரூபா 5/-ம் கட்டியதன் பேரில் 12-9-67-ம் திகதி மாலை 3 மணி வரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்குக் கேள்வி விளம்பரத்திற் காணலாம்.

க. ஆறுமுகம்,
அக்கிராசனர்,
வரணிக் கிராம சபை.

வரணிக் கிராம சபை,
31-8-67 219

### 1000 ரூபா பிணை

காங்கேசன்துறை, ஞாயிறு

சுன்னாகத்தைச் சேர்ந்த இராசநாயகம் சிவக்கொழுந்து என்பவரின் 350 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை சுன்னாகம் பஸ்நிலையத்தில் பட்டப்பகலில் அறுத்துக் களவாடியதாக குருநாகலைச் சேர்ந்த எம். கயிலை ஆண்டிவேல், முனுசாமி நல்லம்மா ஆகியோர் மீது சுன்னாகம் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குமல்லாகம் அடிஷனல் மாஜிஸ்திரேட் திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிரிகள் இருவரையும் தலா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி செப்டம்பர் 5-ம் திகதிகோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

### தொழிலாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை பஸ் தொழிலாளர் கழகத்தின் ஆறுவது வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 11-ந் திகதி டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.


### ஆடவர்களுக்கு

அதிக சக்தி தேவை வலிவிழந்து பொலிவிழந்து வாடிநிற்கும் ஆடவர்களுக்கோர் வரப்பிரசாதம்

**விட்டாடோன் வில்லைகள்**

வாலிபர்களைப்போல் வலுவூட்டி இன்பம் பெருக்கி உடன் பலன்தர உத்தரவாதமானது.

பலன் ஒருபோதும் தவறாது

எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்

விலை ரூ. 7-50
(தபால் செலவு சதம் 50)

விநியோகஸ்தர்கள்:

**மெட்ரோ ஏஜென்ஸி**
235 1/1, நொறிஸ் ரோட்,
கொழும்பு.


### யாழ்ப்பாணம்பட்டினம்



ஆனைப்பந்தி உபதபாற் கந்தோருக்கு அண்மையில்
2 கட்டிட காணிகள் 2
அதே இடத்தில் வைத்து
1967 செப்டம்பர் 10ந்திகதி
பி. ப. 3-30 மணிக்கு
**பிரசித்தஏலத்தில்**
விற்பனை செய்யப்படும்
30 நாட்களுக்குள் முழுத் தொகையும் செலுத்தப்படவேண்டும்

### பருத்தித்துறை

பீச்ரோட்டில் வெளிச்ச வீட்டுக்குப் பக்கத்தில்
12கட்டிடகாணிகள் 12
அதேஇடத்தில் வைத்து
1967 செப்டம்பர் 11ந்திகதி
காலை 10 மணிக்கு
**பிரசித்தஏலத்தில்**
விற்பனை செய்யப்படும்
30 நாட்களுக்குள் முழுத் தொகையும் செலுத்தப்படவேண்டும்

### யாழ்ப்பாணம் பட்டினம்

அம்மன் ரோட்டில் வீரகாளி அம்மன் கோவிலுக்குப்பக்கத்தில்
6 கட்டிட காணிகள் 6
அந்த இடத்தில் வைத்து
1967 செப்டம்பர்11ந் திகதி
பி. ப. 3-30 மணிக்கு
**பிரசித்த ஏலத்தில்**
விற்பனை செய்யப்படும்
12 மாதங்களுக்குள் முழுத் தொகையும் செலுத்தவேண்டும்

யாழ்ப்பாண ஏலவிற்பனை சம்பந்தமான முழு விபரங்களுக்கும் தயவுசெய்து தொடர்பு கொள்க
திரு. ரீ. வடிவுநாதன்
''பூகன்ஸ்''
71, பவர்ஹவுஸ்ரோட்,
யாழ்ப்பாணம்.
அல்லது
H, P, T.
64, கெய்ஸர்வீதி, கொழும்பு
220

*ச. ச. நிலைய சமாஜ*

### கட்டுரைப் போட்டி முடிவுகள்

சுழிபுரம், ஞாயிறு

யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜம், சமாஜ விழாவை முன்னிட்டு நடாத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள்:

கீழ்ப்பிரிவு: ந. ப. ஆனந்தசுந்தரி - மாதர் சனசமூக நிலையம் சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரி, க. இராசேஸ்வரன் - கலையகம் சனசமூக நிலையம் புத்தூர். வ. விஜயலட்சுமி - நல்லூர் மங்கையர்கழகம், யாழ்ப்பாணம்.

மேற்பிரிவு: ந. ஸ்ரீகாந்தா நீர்வேலிப்பத்தனை அம்பாள் சனசமூகநிலையம் காரைநகர். இ. விஜயதேவி - நல்லூர் மங்கையர் கழகம், யாழ்ப்பாணம். செ. செல்வராசா- ஸ்ரீகலைமகள் சனசமூகநிலையம்அரியாலை யாழ்ப்பாணம், எம். எம். யெருட் - சென். ஜேம்ஸ் சனசமூக நிலையம் ஊர்காவற்துறை.

திருக்குறள் மனனத் தேர்வு-

கீழ்ப்பிரிவு: நா. ந. வரதராசன் - மண்டைதீவு மத்திய ச. ச. நிலையம், மு. யோகரதி-புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் ச. ச. நிலையம். க. காந்தரூபன்-புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் சனசமூக நிலையம்.

மேற்பிரிவு: ... வாகு-கரவெட்டி சிந்தாமணி ... நிலையம், எஸ். குணரத்தி

*தாளையடி*

### ராணுவதாக்குதல் வழக்கு

சாவகச்சேரி, ஞாயிறு

1964-ம் வருடம் ஆடி மாதம் 5-ம் திகதி இயக்கச்சியில் சட்ட விரோதமாகக் கூட்டம் கூடிஇராசநாயகம், ஸ்ரனிஸ்லொஸ், முத்தையா யோசப் ஆகியோருக்கு அடித்தும் பொருட்களுக்குச் சேதம் பண்ணியதுமாக எல்லாமாக நான்கு குற்றச்சாட்டுகளின் பேரில் இராணுவ வீரர்களானஎன். டீ. டீ. பெர்னண்டோ, கே. பி. சமரசிங்கி, ரி. எவ். சீடின், டபிள்யூ. கே. எம். ரூபசிங்க ஆகிய நால்வர் மீதும் பளைப்பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. றுபேட்சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபின்மாவட்ட நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டிருந்தது.

இவ் வழக்குநேற்றுக்காலை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. வி. எம். குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இவ் வழக்கின் 7-வது சாட்சி சுகவீனம் காரணமாக கோர்ட்டில் சமுகமளிக்கத்தவறியதைத் தொடர்ந்து இவ்வருடம் டிசம்பர் 3-ம், 10-ம் திகதிகளுக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புரக்டர் சி. பாலகிருஷ்ணனின் அனுசரணையுடன் ஆஜரானர். வழக்காளி தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் எஸ். கே. திரவியநாயகம் ஆஜரானர்.

### வாக்குறுதி நிறைவேறியது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்குமிடையில் இரண்டு நேரடி தொலைபேசி தொடர்பு இணைக்கப்பட்டுள்ளது. மற்றொரு நேரடித் தொடர்பும் விரைவில் இணைக்கப்படும்.

இம்மாதம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த தபால் போக்குவரத்து மந்திரி திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா, கொழும்பிற்கும், யாழ்ப்பாணத்திற்கும் நேரடித் தொடர்புஏற்படுத்துவதாக வாக்குறுதியளித்திருந்தார்.

னம்-கலையகம் சனசமூக நிலையம்புத்தூர். [க. தங்கேஸ்வரன் கலையகம் சனசமூக நிலையம், புத்தூர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

தமிழ் இலக்கிய வினாவிடை: 1967 டிசம்பரிலும் அதன் பின்னரும் நிகழ விருக்கும் கல்விப்பொதுத் தராதரப் பத்திர [சாதாரண] வகுப்பு மாணவர்கள் தேர்ச்சிக்கான நூல்விலை 2 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2325

வீடும் வளவும்:

பருத்தித்துறை, தும்பளை வீதியிலுள்ள மணல் ஒழுங்கையில் காலஞ்சென்ற வி. ஆறுமுகம் ஆசிரியருடைய வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. காணியின் பரப்பு அளவு 1 1/2. விபரங்களுக்கு ஏ. வீ. ஜெயசீலன், ''தேவவாசா'', தும்பளை, பருத்தித்துறை என்ற விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். 2338

### நல்லைக் கந்தன் பாமலர்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

என்றும் இளமையும் அழகும் இனிமையும் ததும்ப, வேண்டுவார்க்கு வேண்டியதை விருப்புடன் கொடுக்கும் குழந்தை முருகனின் அட்டைப் படத்துடன்' நல்லூர்க் கந்தன் திருவருட்பாமலர்கள்' மெய்கண்டான் ஸ்தாபனத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. கோடிக்கணக்கான அன்பர்களைத் தன்னிடம் ஈர்க்கும் நல்லூர் கந்தசுவாமியாரது தேர்த் திரு விழாத்தினமாகிய நேற்று இம்மலர் மெய்யடியார்களுக்கு அன்பளிப்பாக மெய்கண்டான் ஸ்தாபனத்தாரால் வழங்கப்பட்டுள்ளது.

### காரியாதிகாரிக்கு பிரிவுபசாரம

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

பொதுசன உதவிஅதிகாரியாகப் பதவியுயர்ச்சிபெற்று யாழ்ப்பாணம் கச்சேரிக்குச் செல்லும் வடமராட்சிக் காரியாதிகாரி திரு. ஏ. சி. விஸ்வநாதனுக்கு அப்பகுதிக் கிராமசேவையாளர் காரியாலய ஊழியர் ஆகியோரால் ஒரு பிரிவுபசார வைபவம் நடாத்தப்பட்டது. புதிய காரியாதிகாரி திரு. கே. ஜெயகாந்தன் இவ்வைபவத்துக்கு தலைமைவகித்தார்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


ராதா மணிமார்க்

**சந்தனாதித் தைலம்**

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனால் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

[மருந்து, மருந்துச்சரக்கு வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். ரோட். ''பாலேந்திரா பில்டிங்''
பெரியகடை, 160, செட்டியார் தெரு,
யாழ்ப்பாணம். கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். ஜி. ஆர். ராதா—வழக்கு

# “எம்.ஜி.ஆர். தன்னைச் சுட்டு விட்டதாக ராதா சொன்னார்”

## ராயப்பேட்டை ஆஸ்பத்திரி உதவி வைத்திய நிபுணர் சாட்சியம்

சென்னை, செப். 2

நான் எம். ஜி. ஆரை ஆஸ்பத்திரியில் பரிசோதனை செய்தபோது அவரது இடது காதால் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அப்போது அவரது ஷேர்ட்டிலும் வேஷ்டியிலும் இரத்தக் கறைகள் காணப்பட்டன. எம். ஜி. ஆர். அனுமதிக்கப்பட்ட சுமார் ஒரு மணி நேரத்தில் எம். ஆர். ராதா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு ஆறு அல்லது ஏழு அடி தூரத்திலுள்ள வார்ட்டில் அனுமதிக்கப்பட்டார். ராதாவின் சால்வையிலும் அவர் அணிந்திருந்த துணிகளிலும் இரத்தக்கறைகளிருந்தன. இருவருக்கும் நான் முதலுதவி அளித்தேன். ராதா, எம். ஜி. ஆர். தம்மை எம். ஜி. ஆர். தோட்டத்தில் சுட்டு விட்டதாகக்கூறியதை நான் விபத்துக்கள் சம்பந்தமான விபரங்கள் பதியும் புத்தகத்தில் பதிந்தேன். இதன்பிரதி சென்ற். தோமஸ் மவுண்ட் பொலிஸ் நிலைய பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பி வைத்தேன். ராதா அப்போது தெளிவாக விபரத்தைச் சொல்லமுடியாத நிலையிலிருந்தார்.

இவ்வாறு எம். ஜி. ஆர்.-ராதா வழக்கில் சாட்சியமளித்த ராயப்பேட்டை ஆஸ்பத்திரி உதவி வைத்திய நிபுணர் டாக்டர் கே. விசுவலிங்கம் தெரிவித்தார்.

டாக்டர் விசுவலிங்கம் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவம் நடந்ததினமான ஜனவரி 12-ம்திகதி எம். ஜி. ஆர். ஆஸ்பத்திரிக்குள் இரத்தம் வழிய தமது இடதுகாதைப் பொத்திக் கொண்டு நடந்துவந்தார். அவர் உடனே ஆப்பரேஷன் தியேட்டருக்குள் கொண்டு செல்லப்பட்டார். அவர் எம். ஆர். ராதா மாலை 5-30 மணியளவில் தம்மைச் சுட்டுவிட்டதாகத் தெரிவித்தார். எம். ஜி. ஆர்., எம். ஆர். ராதா ஆகியோரை எக்ஸ்றே படம் பிடிக்கப் பட்டது. எம். ஜி. ஆரின் இடதுபக்க தாடையில் ஒரு தோட்டா இருப்பது போன்ற அடையாளமும் ராதாவின் எக்ஸ்றே படத்தில் அவரது வலது பக்க கழுத்தில் இரு தோட்டாக்கள் போன்ற அடையாளங்களும் தெரிந்தன.

ராதாவை யார் கூட்டி வந்தார்கள் என்பது பற்றிக் கேட்டீரா என்ற ராதாவின் வழக்கறிஞரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தாம் அவ்விதம்கேட்டதாகவும் ராதா பதில் தெரிவிக்கவில்லையென்றும் கூறினார். விபத்துக்கள் சம்பந்தமாகப்பதியும் புத்தகத்தில் தாம் அவசரமாகப் பதிந்ததால் சில விபரங்கள் குறிப்பிட முடியாது போய் விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆப்பரேஷன்தியேட்டருக்குள் எம். ஜி. ஆரை அவரது சகோதரர் சக்ரபாணி சந்தித்தார் என வழக்கறிஞர் கூறியதைச் சாட்சி மறுத்தார்.

பொலிஸாரின் தூண்டுதலால் டாக்டர் சில பதில்களை அவர்களுக்குச் சாதகமாகக்கூறுவதாக வழக்கறிஞர் குறிப்பிட்டதையும் சாட்சி மறுத்தார்.

### சர் ராஸிக் பரீத் மலேசிய ஹைகமிஷனர்

கொழும்பு, சனி

நியமன எம். பி. சர் ராஸிக் பரீத் மலேசியாவில் இலங்கை ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறாரெனத் தெரிகிறது.


## இப்பொழுது நடைபெறுகிறது

கெபிடல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
விஜிதா [ஹட்டன்] மொடர்ன் [பதுளை] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]

6-9-67 முதல் வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

புதுமையான கதை! உணர்ச்சிமிக்க வசனம்!
காதிற்கினிய பாடல்கள்!
முழுவதும் ஒரு ஹாஸ்ய விருந்து!

ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், நாகேஷ், விஜயலட்சுமி, ரத்னா, மாதவி
நடித்த



# நாம் மூவர்

டைரக்ஷன்: ஜம்பு  பாடல்கள்: வாலி  இசை: என்.எம்.எஸ்.

2-வது மாதம்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]  கிங்ஸ்லி [கொழும்பு]  வெம்பிளி [கண்டி]
மற்றும் 4 திரைகளில்

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த

## அன்பே வா


இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.


(Today only)

## மனோஹரா

[யாழ்ப்பாணம்]

பி.ப. 4-45, 7-00, 9-45.

Horst Bucholz
Sylva Koscina
in
THAT MAN IN ISTANBUL
(Secret Agent Film)

## ராஜா RAJAH

யாழ்ப்பாணம் JAFFNA.

தினசரி 2-30, 6-30, 930
போயாதினங்களில் 4காட்சிகள்

ஏ. வி. எம், ராஜன்
கே. ஆர். விஜயா
நடித்த

## மனம் ஒரு குரங்கு

## நியூ காலிங்கன்

[இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30

சிவாஜி
கே. ஆர். விஜயா
நடித்த

## செல்வம்

## REGAL JAFFNA

Time: 4-30 7-00 p. m.
9-45 p. m.

Rod Steiger &
Geraldine Fitzgerald
in
M. G. M's
The Pawn Broker
(Adults)


சரசாலை கொலைவழக்கு

# ‘எப்படி இறந்தார் என்று சிவப்பிரகாசத்தைகேட்டேன்’

யாழ்ப்பாணம், திங்கள்

சிவப்பிரகாசத்திடம்நான் முருகேசு என்ன காரணத்தால் இறந்தார் என்று கேட்டேன். அவர் கழுத்து வெட்டால் செத்துப் போனார் என்றார். பொலிசாருக்கு நான் சிவப்பிரகாசத்திற்கு பெயரைச் சொல்லவில்லை. கார்த்திகேசுவைக் கண்டதாகப் பொலிசாரிடம் கூறினேன்

சரசாலை கொலை வழக்கில் எதிரியின் வழக்கறிஞர் திரு. ஜி ஜி பொன்னம்பலம் குறுக்கு விசாரணை செய்கையில் கண்கண்ட சாட்சியான தருமலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு சென்ற வெள்ளிக்கிழமை காலை வ பகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் நான்காவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் 67-ம் ஆண்டு பெப்ரவரி 19-ம் தேதி சரசாலையில் செல்லத்துரை பேரம்பலம் என்பவர் கந்தையா சிவகுரு அல்லது செல்லத்துரை என்பவரைக் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று சுமார் ஒரு மணி நேரம் தருமலிங்கத்தைக் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: இறந்தவரைமுதலில் கண்டீரா? -எதிரியைக் கண்டேன்.

வழ: ஒழுங்கையில் எதிரிக்குப்பின்னால்சென்றுகொண்டிருந்தீர்?-ஆம்.

வழ: பொலிஸாருக்கு எதிரி முன்னாலிருந்து வந்ததாகக் கூறினீர்?- இல்லை. வயலிலிருந்துவந்ததாகக்கூறினேன்.

வழ: சார்ஜன்ட் அருளானந்தத்திடம் இரண்டாம் முறைப்பாட்டில் உமக்குப் பின்னால் வந்ததாகக் கூறினீர்?-இல்லை.

வழ: முழுநேரமும் எதிரி உமக்கு முன்னால் சென்று கொண்டிருந்தார்?-ஆம்.

வழ: பொலிஸ் முதல் வாக்குமூலத்தில் எதிரி முன்னால் இருந்துவந்து என்னைக் கடந்து சென்றபோது இறந்தவர் வந்ததைக் கண்டனன் என்றீரா?-இல்லை.

வழ: இன்று நீர்கொடுத்த வாக்குமூலத்தின்படி இரண்டு வெவ்வேறு வெட்டு விழுந்திருக்கிறது?-ஆம்.

வழ: முதல்வெட்டு விழும்போது, ஒழுங்கையில்யாரையாவது கண்டீரா?-நான்குளறிய சத்தத்தில், கார்த்திகேசுவும் சிவப்பிரகாசமும் வந்தார்கள்.

வழ: முதல்வெட்டு விழுந்ததும் குளறினீரா!- ஆம்.

வழ: எதிரி போனபின் கார்த்திகேசுவும், சிவப்பிரகாசமும் வந்தார்கள்?- ஆம்.

வழ: எதிரியுடன் உமக்கு கோபமில்லை?- இல்லை.

வழ: நீர் எதிரிக்கு நெருங்கிய சொந்தக்காரரர்? - சரியான சொந்தக்காரரர்.

வழ: உமது பேரனும் எதிரியின் தகப்பனும் ஒருவர்? - ஆம்.

நீதி: எதிரியின் தகப்பனை எப்படி அழைப்பீர்? - அப்பா என்று

வழ: ஏன்? - நெடுகவும் அழைத்து வந்தேன்.

வழ: எல்லாரையும்‘அப்பா’ என்று அழைப்பீரா?-அவரை அழைப்பேன்.

வழ: உமது பேரன் இரண்டு தாரம்முடித்தாரா? அதைப்பற்றி எனக்குத்தெரியாது.

வழ: உனது பேரனார் தனது சொத்தை எதிரிக்கு எழுதி விட்டார்? எங்களுக்குச்சொத்துதேவையில்லை.

வழ: ஏன் தலையைக் கீழே குனிகிறீர்? என்ன செய்கிறது? [சாட்சி உடம்பை நெளிக்கிறார்]

நீதி: களைத்துப் போய் விட்டார்.

வழ: நானும் களைத்து விட்டேன்.

வழ: பேரனார் இருக்கிறாரா? - ஆம்.

வழ: எதிரி வீட்டை நீர் போவதில்லையா? - இல்லை.

வழ: நெருங்கிய உறவினர் வீட்டை போவதில்லையா? - இல்லை.

நீதி: முதன்முதல் சிவப்பிரகாசத்தை எப்ப கண்டீர்?-கழுத்தை வெட்டிய போது.

வழ: கீழ்க் கோர்ட்டில் இறந்தவரை கிட்ட பார்த்த போது கிவப்பிரகாசத்தை கண்டதாக கூறினீரா?- ஞாபகமில்லை.

நீதி: அந்த நேரத்தில் சிவப்பிரகாசத்தை கீழ்க் கோர்ட்டில் பார்த்ததாகக் கூறினீர்?-ஆம்.

வழ: செத்தவரை எதிரி இழுத்துச் சென்றபோது, சிவப்பிரகாசத்தை பார்க்கவில்லை? - பார்க்கவுமில்லை, காணவுமில்லை.

வழ: சிவப்பிரகாசத்துடன் கதைத்தீரா?-இல்லை.

வழ: சிவப்பிரகாசம் உம்முடன் கதைத்தாரா?-ஆம்.

வழ: என்ன கதைத்தார்?-கழுத்து வெட்டால் இறந்தார் என்றார்.

வழ: சிவப்பிரகாசத்தை நீர் ஏதாவது கேட்டீரா?-ஆம்.

நீதி: ஒரு மறுமொழி சொல்ல இவ்வளவு நேரமா? விழுங்கி, விழுங்கி ஏன் பதில் சொல்கிறீர். கேள்விக்கு இல்லை, ஆம், ஞாபகமில்லை என்று ஏதாவது ஒரு பதில் சொல்லலாமே.

வழ: நேற்றுக் கேட்டபோதுசிவப்பிரகாசத்துடன் கதைக்கவில்லையென்றீர்?
—எனக்கு நேற்று கேள்வி விளங்கவில்லை

வழ: சிவப்பிரகாசம் உன் தாயாரின் சகோதரி புருஷனா? — ஆம்.

நமசிவாயம் சிவப்பிரகாசம் சாட்சியமளித்தபோது கூறியதாவது:

எதிரியும் இறந்தவரும் சொந்தக்காரரர். நான் பாக்கியம் வீட்டிற்கு சம்பவம் நடந்த தினம் சூடு வைக்கப் போனேன். நான் அங்கிருக்கும் போது ஐயோ என்ற சத்தம் கேட்டது. ஓடிப்போனேன், எதிரி, சிவகுருவை இழுத்துக்கொண்டு போய் வெட்டியதைக் கண்டேன். கத்தியால் வெட்டினார். அதன்பின் ஒன்றும் காணமுடியாமலிருந்தது. நான் மயங்கி வேலியுடன் சாய்ந்துகிடந்தேன். அங்கே தருமலிங்கத்தையும்கார்த்திகேசுவையும் கண்டேன்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் குறுக்குவிசாரணை செய்தபோது சிவப்பிரகாசம் கூறியதாவது:

சம்பவம் நடந்தது முதல் இன்றுவரை பாக்கியத்துடன் ஒரு வார்த்தையாவது கதைக்கவில்லை. பாக்கியமும் என்னுடன் கதைக்கவில்லை. சம்பவத்திற்கு முன்பும் நான் அதிகம் போறதில்லை.

வழ: அப்படியானால் சம்பவ தினம் அங்கு நீர் போனது அசாதாரணமான விஷயம்?— சூடு வைக்கப் போனேன். பாக்கியம் வீட்டிலிருந்து கிழக்கு மேற்கு ஒழுங்கைவழியாக இராமாவில் ஒழுங்கைக்குப் போனேன்.

வழ: அப்படித்தான் போனீரா?— இல்லையில்லை. பாக்கியம் வீட்டிலிருந்து முள்ளுக்கம்பியின் ஊடாக மற்றொருவர் வீட்டிற்குப் போய் ஒழுங்கைக்கு போனேன்.

மேல்விசாரணை இன்று 4-ம் திகதி காலை தொடர்ந்து நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org